IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 858/2009
Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கரன் | Caste | : | |
| Father Name | : | ஆறுமுக முதலியார் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of October, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் கூடுதல் பிராமாண வாக்குமூலத்தில் நான் செய்துள்ள அ.வ.எண்.858/2009 அதில் சொத்து குறித்து செல்வராஜிக்கு விற்பனை செய்த அப்துல்லா பாஷாவிற்கு எந்த அட்டவணையில் அ.வ.எண்.909/2009 என்ற வழக்கில் எந்த பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை குறித்து நான் குறிப்பிட்டுள்ளேனா மற்றும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை மற்றும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

2. அப்துல்லா பாஷா செல்வராஜிக்கு விற்ற கிரைய பத்திரம் ஆவண எண்.1155/1967 என்ற ஆவணமும் மற்றும் செல்வராஜ் அன்றைய தினமே விநாயக முதலியாருக்கு விற்பனை செய்த ஆவண எண். 1158/1967 என்ற ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படி செல்லுபடியாகாத கிரைய பத்திர முன்னிலைக்கு விநாயக முதலியார் மற்றும் ஆறுமுக முதலியார் ஆகியோர் பாகம் பிரித்து கொண்டு சர்வே எண்.25/1 மற்றும் 25/2 என்பது சட்டபடி செல்லுபடியாகாத காரணத்தினால் ஆறுமுக முதலியாருக்கு பாகமானது வராது என்று சொன்னால் சரியல்ல.

3. நான் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தின் மூலம் தாக்கல் செய்த வா.சா.ஆ.9 லிருந்து 14 வரை உள்ள ஆவணங்களில் சான்றாவாணம் 9 ஐ தவிர மற்ற ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.11 லிருந்து 14 வரை உள்ள ஆவணங்கள் சர்வே எண்.25/5 என்ற சொத்திற்கு சம்பந்தம் உடையது என்று சொன்னாலும் தாவா சொத்தின் சர்வே எண்ணான 25/1 மற்றும் 25/2 என்ற சர்வே எண்ணிற்கு தொடர்பு இல்லாதது என்று சொன்னால் சரியல்ல.

4. பிரதிவாதி முகம்மது ஏஜாஸ் என்பவருக்கு அவருடைய தாவா சொத்தின் அனுபவித்தையும் சுவாதீனத்தையும் கருத்தில்கொண்டு வருவாய்த்துறை அவருக்கு பட்டா கொடுத்துள்ள நிலையில் நாங்கள் கோரியுள்ள பரிகாரமான விளம்புகை பரிகாரமும் தடையுத்தரவு பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு வருவாய்த்துறையால் நாங்கள் அனுபவத்தில் உள்ளோம் என்பதற்கு அங்கீகரிக்கப்படாததால் நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா பிரதிவாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை = இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI